**மே – 18**

# TNPSC துளிகள்

- உதகமண்டலத்தில் உள்ள அரசுத் தாவரவியல் பூங்காவில் (GBG) நடைபெறும் 127வது வருடாந்திர மலர் கண்காட்சியைத் தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
- என்எல்சி இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனமானது, கார்பன் பிடிப்பு அமைப்பில் (CCS) விரிவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முன்னெடுப்பிற்காக வேண்டி சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் சேர்ந்து பிணைப்பு சார் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்திய இராணுவம் மற்றும் ஜம்மு, மத்திய சேமக் காவல் படை (CRPF) மற்றும் காஷ்மீர் காவல்துறை ஆகியவை 'Operation Nader' என்ற பெயரில் ஒரு தீவிரவாத எதிர்ப்புக் கூட்டு நடவடிக்கையை மேற்கொண்டன.
- உத்தரப் பிரதேச மாநிலத்தின் ஜேவர் விமான நிலையத்திற்கு அருகில் இந்தியாவின் 6வது குறைக்கடத்தி உற்பத்தி அலகினை நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- மத்திய சேமக் காவல் படை மற்றும் சத்தீஸ்கர் காவல்துறை ஆகியவை இணைந்தக் கூட்டுப் படைகள் ஆனது, 'பிளாக் ஃபாரஸ்ட் நடவடிக்கை' என்ற ஒரு பெயரில் நக்சல் அமைப்புகளுக்கு எதிராக 21 நாட்கள் நீண்ட, இதுவரையில் இல்லாத அளவிற்கு மிகப் பெரிய நடவடிக்கையை மேற்கொள்கின்றன.
- 2026 ஆம் ஆண்டில் மும்பையில் ஒரு புதிய வளாகம் திறக்கப்பட உள்ளதோடு, இல்லினாய்ஸ் டெக் நிறுவனமானது, இந்தியாவில் முழுமையான பட்டங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதல் அமெரிக்கப் பல்கலைக்கழகமாக மாறி உள்ளது.
- கம்போடியா நாடானது, சீனாவுடன் அதன் சமீபத்திய மற்றும் மிகப்பெரிய 'கோல்டன் டிராகன் கூட்டு இராணுவப் பயிற்சியை' நடத்துகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பல்லடுக்குச் சேர்மத்திலான வாயுக் கொள்கலன் வழங்கல்





- தமிழ்நாடு மாநிலமானது பல்லடுக்குச் சேர்மத்திலான திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (LPG) வாயுக் கொள்கலன்/சிலிண்டர்களின் இணைப்புகள் (Composite cylinder)

வழங்களில் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் தமிழ்நாட்டில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (IOCL) நிறுவனம் மூலம் சுமார் 1.06 லட்சம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- அதே காலக் கட்டத்தில் கர்நாடகா சுமார் 60,000 இணைப்புகளை விற்பனை செய்து உள்ளது.
- இது உட்செலுத்து ஊது முறையில் வார்க்கப்பட்டு, உள் பூச்சு பூசப்பட்ட, பலபடிச் சேர்ம கண்ணாடி இழையினால் ஆன மேலடுக்கினைக் கொண்ட மூன்று அடுக்கு சிலிண்டர் ஆகும்.
- இந்த சிலிண்டர் ஆனது இலகுரக வகையில் மற்றும் துருப்பிடிக்காத மற்றும் தீப்பற்றல் ஏற்பட்டால் வெடிக்காத வகையிலானதாகும்.

# தேசியச் செய்திகள்

## உச்ச நீதிமன்றத்திற்கு குடியரசுத் தலைவர் அனுப்பிய 14 கேள்விகள்





- இந்திய அரசியலமைப்பின் 143வது சரத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழக ஆளுநர் வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து ஆலோசனை பெறுவதற்கு குடியரசுத் தலைவர் முயற்சித்துள்ளார்.
- இந்தியக் குடியரசுத் தலைவரால் உச்ச நீதிமன்றத்திற்கு பின்வரும் 14 கேள்விகள் அனுப்பப் பட்டுள்ளன.
- இந்திய அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ் ஒரு மசோதா சமர்ப்பிக்கப்படும் போது ஆளுநருக்கு முன் உள்ள அரசியலமைப்பு விருப்பங்கள் (Discretions) என்ன?
- இந்திய அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ் ஒரு மசோதாவைத் தாக்கல் செய்யும் போது, அமைச்சர்கள் குழு வழங்கும் உதவி மற்றும் ஆலோசனைகளுக்கு ஆளுநர் கட்டுப்படுகிறாரா?

- இந்திய அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ் ஆளுநர் அரசியலமைப்பு விருப்பு உரிமையைப் பயன்படுத்துவது நியாயமானதா?
- இந்திய அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ் ஆளுநரின் நடவடிக்கைகள் தொடர்பாக நீதித்துறை மறு ஆய்வுக்கு இந்திய அரசியலமைப்பின் 361வது சரத்து ஒரு முழுமையான தடையா?
- அரசியலமைப்பு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு கால அவகாசமும், ஆளுநரால் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தும் முறையும் இல்லாத நிலையில், இந்திய அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ் உள்ள அனைத்து அதிகாரங்களையும் ஆளுநரால் பயன்படுத்துவதற்கு நீதிமன்ற உத்தரவுகள் மூலம் காலக்கெடுவை விதிக்க முடியுமா?
- இந்திய அரசியலமைப்பின் 201வது சரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் அரசியலமைப்பு விருப்புரிமையைப் பயன்படுத்துவது நியாயமானதா?
- அரசியலமைப்பு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு மற்றும் குடியரசுத் தலைவர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தும் முறை எதுவும் இல்லாத நிலையில், இந்திய அரசியலமைப்பின் 201வது சரத்தின் கீழ் குடியரசுத் தலைவரின் விருப்புரிமையைப் பயன்படுத்துவதற்கு நீதிமன்ற உத்தரவுகள் மூலம் காலக்கெடுவை விதிக்க முடியுமா?
- குடியரசுத் தலைவரின் அதிகாரங்களை நிர்வகிக்கும் அரசியலமைப்புத் திட்டத்தின் வெளிச்சத்தில், இந்திய அரசியலமைப்பின் 143வது சரத்தின் கீழ், குடியரசுத் தலைவர் ஒரு மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகவோ அல்லது வேறு விதமாகவோ ஒதுக்கும்போது, உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்று, உச்ச நீதிமன்றத்தின் கருத்தைப் பெற வேண்டுமா?
- இந்திய அரசியலமைப்பின் சரத்து 200 மற்றும் 201வது சரத்தின் கீழ், ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவரின் முடிவுகள், சட்டம் அமலுக்கு வருவதற்கு முந்தையக் கட்டத்தில் நியாயப் படுத்தப்படுமா? ஒரு மசோதா அவ்வாறு சட்டமாக மாறுவதற்கு முன்பு, எந்த வகையிலும் அதன் உள்ளடக்கங்கள் மீது நீதிமன்றங்கள் நீதித்துறைத் தீர்ப்பை மேற் கொள்ள அனுமதிக்கப்படுகிறதா?
- இந்திய அரசியலமைப்பின் 142வது சரத்தின் கீழ், அரசியலமைப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தச் செய்வதையும், குடியரசுத் தலைவர்/ஆளுநர் உத்தரவுகளையும் எந்த வகையிலும் மாற்ற முடியுமா?
- மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டம், இந்திய அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் நடைமுறையில் உள்ள ஒரு சட்டமா?
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 145(3)வது சரத்தின் விதிமுறையைக் கருத்தில் கொண்டு, இந்த மாண்புமிகு நீதிமன்றத்தின் எந்தவொரு அமர்வும், அதன் முன் நடவடிக்கைகளில் உள்ள ஒரு கேள்வி, அரசியலமைப்பின் விளக்கம் தொடர்பான கணிசமான சட்டக் கேள்விகளை உள்ளடக்கியதா என்பதை முதலில் முடிவு செய்து, குறைந்த பட்சம் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அதைப் பரிந்துரைப்பது கட்டாயமில்லையா?
- இந்திய அரசியலமைப்பின் 142வது சரத்தின் கீழ் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் நடைமுறைச் சட்டம் அல்லது இந்திய அரசியலமைப்பின் 142வது சரத்து தொடர்பான விஷயங்களுக்கு மட்டுமே உள்ளதா? அரசியலமைப்பு அல்லது நடைமுறையில் உள்ள சட்டத்தின் தற்போதைய அடிப்படை அல்லது நடைமுறை விதிகளுக்கு முரணான அல்லது முரண்பாடான உத்தரவுகளைப் பிறப்பித்தல்/ஆணைகளைப் பிறப்பித்தல் வரை நீட்டிக்கப்படுகிறதா?
- இந்திய அரசியலமைப்பின் 131வது சரத்தின் கீழ் வழக்குத் தொடருவதைத் தவிர, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையிலான மோதல்களைத் தீர்ப்பதற்கு

உச்ச நீதிமன்றத்தின் வேறு எந்த ஒரு அதிகார வரம்பையும் அரசியலமைப்பானது தடை செய்கிறதா?

## இந்தியாவில் உள்நாட்டுப் புலம்பெயர்வுகள்

- உள்நாட்டு புலம்பெயர்வுக் கண்காணிப்பு மையமானது (IDMC), 2024 ஆம் ஆண்டு உலகளாவிய உள்நாட்டுப் புலம்பெயர்வுகள் குறித்த அறிக்கையை வெளியிட்டது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 5.4 மில்லியன் புலம்பெயர்வுகள் பதிவாகின என்ற ஒரு நிலையில் பெரும் வெள்ளப் பாதிப்புகளானது அவற்றில் மூன்றில் இரண்டு பங்கு புலம் பெயர்வினை ஏற்படுத்தியதுடன், இது கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத ஒரு அளவிற்கு அதிகமாகும்.
- வன்முறை காரணமாக ஏற்பட்ட 1,700 புலம்பெயர்வுகளில், மணிப்பூர் மாநிலத்தில் மட்டும் சுமார் 1,000 என்ற அளவு புலம்பெயர்வுகள் பதிவாகியுள்ளதுடன், அத்தகைய புலம்பெயர்வுகளுக்கான முக்கிய இடமாக உள்ளது.
- உள்நாட்டுப் புலம்பெயர்வு குறித்தத் தரவுகள் மற்றும் பகுப்பாய்விற்கான உலகின் முன்னணி ஆதாரமாக IDMC உள்ளது.
- இது நார்வே அகதிகள் சபையின் (NRC) ஒரு பகுதியாக 1998 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- 1951 ஆம் ஆண்டு அகதிகள் உடன்படிக்கையிலோ அல்லது அதன் 1967 ஆம் ஆண்டு அகதிகள் பாதுகாப்பு நெறிமுறையிலோ இந்தியா கையெழுத்திடவில்லை.
- புலம்பெயர்வு குறித்த உலகளாவிய ஒப்பந்தம் (2018) ஆனது, பருவநிலை சார்ந்த இடப் பெயர்ச்சியைக் குறிப்பிட்டாலும், அது பிணைப்பு சார்ந்த ஒப்பந்தம் இல்லை.





## விமானப் படையின் கட்டளை வழங்கும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு அமைப்பு

- விமானப் படையின் கட்டளை வழங்கீட்டு மூலமான ஒருங்கிணைந்தக் கட்டுப்பாட்டு அமைப்பு (IACCS) என்பது இந்திய விமானப்படையின் விமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்குமான, கட்டளை வழங்கீட்டு மூலமான ஒரு

தானியங்கி வான்வழிப் பாதுகாப்பு மையமாகும்.

- இது உத்தி சார் நிலை (விமானப்படை தலைமையகம்), செயல்பாட்டு நிலை (கட்டளை வழங்கீட்டு தலைமையகம்) மற்றும் உத்தி சார் நிலை (பிரிவு நிலை) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இந்த IACCS அமைப்பு ஆனது, பல்வேறு வகையான மூலங்களிலிருந்துத் தரவுகளைப் பெறுவதோடு, விரிவான அங்கீகரிக்கப்பட்ட நிகழ்நேர வான்வெளிச் சூழல் அமைப்பு மாதிரியினை உருவாக்குவதற்கான அறிக்கைகளை உருவாக்குகிறது.




# சர்வதேசச் செய்திகள்

## பன்யான் அல் மர்சூஸ் நடவடிக்கை





- சிந்தூர் நடவடிக்கையின் ஒரு முக்கியப் பகுதியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் (POK) உள்ள ஒன்பது தீவிரவாத முகாம் தளங்களை இந்தியா தாக்கியது.

- ❖ பாகிஸ்தான் நாடானது, இந்தியாவிற்கு எதிராக "பன்யான் மர்சூஸ்" (அரபு மொழியில் "ஈயத்தால் ஆன ஓர் அமைப்பு" என பொருள்படும்) என்ற பெரியதொரு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.
- ❖ பாகிஸ்தான் இராணுவமானது, துல்லியமாக வழி நடத்தப்பட்ட நீண்ட தூர தாக்குதல் வரம்புடைய ஃபதா தொடர் சார்ந்த F1 மற்றும் F2 எறிகணைகளைப் பயன்படுத்தியது.
- ❖ இது இந்தியாவிற்கு எதிராக துருக்கியில் தயாரிக்கப்பட்ட பைராக்டர் TB2 மற்றும் YIHA போன்ற ஆளில்லா விமானங்களையும் பயன்படுத்தியது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவில் பெண்களுக்கான தனியார் வேலைவாய்ப்புகள்




- ❖ இந்தியாவில் பெண்கள், தனியார் துறையின் மூன்று தொடக்க நிலைப் பணிகளில் ஒன்றை மட்டுமே வகிக்கின்றனர் மற்றும் உயர்மட்ட/நிர்வாகப் பதவிகளில் 24 சதவீதப் பதவிகளை மட்டுமே வகிக்கின்றனர்.
- ❖ இந்தியாவில் பாலின ஏற்றத்தாழ்வு என்பது தொடக்க நிலையில் ஏழு ஆண்டுகள் வயது வித்தியாசத்துடன் உள்ள நிலையில் அதாவது ஒரு தொடக்க நிலைப் பதவியில் உள்ள 32 வயதிலான ஆண்களுடன் ஒப்பிடும் போது அதே பதவியிலுள்ள பெண்களின் வயது சராசரியாக 39 ஆக உள்ளது.
- ❖ தொடக்க நிலையில் ஒரு ஆண் அதே நிலைப் பணியில் இருக்கும் பெண்ணை விட உயர்மட்ட/நிர்வாகப் பதவிக்குப் பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்பு என்பது 2.4 மடங்கு அதிகமாக உள்ளது.
- ❖ இந்த நிலையில் ஆண்களை விட பெண்கள் தங்கள் பதவிகளை விட்டு வெளியேறச் செய்வதற்கான வாய்ப்பு 1.3 மடங்கு அதிகமாக உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆகாஷ்தீர் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு


- ❖ செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும், முழுமையாகத் தானியங்கி முறையில் செயல்படும் வகையில் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் 'ஆகாஷ்தீர்' எனும் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பானது, பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்தினால்

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டது.

- இது இந்திய இராணுவத்தின் பல்லடுக்கு வான்வழிப் பாதுகாப்பு (AD) கட்டமைப்பின் ஒருங்கிணைந்தப் பகுதியாகும்.
- பாகிஸ்தான் எறிகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களைக் கண்டறிதல், அதனை அடையாளம் காணுதல், கண்காணித்தல் மற்றும் எதிர்கொள்வதில் இது மிக முக்கியப் பங்கு வகித்தது.




## பல்சர் G359 – அண்ட'இழைகள்'




- பால்வெளி அண்டத்தின், அண்ட இழையில் ஒரு மாபெரும் பிளவு/முறிவை வானியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சந்திரா கலத்திலிருந்துப் பெறப்பட்ட ஊடு கதிர் தரவு மற்றும் தென்னாப்பிரிக்காவில் உள்ள MeerKAT ரேடியோ தொகுப்பு ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட ரேடியோ தரவுகள் ஆகியவை, நாசா அமைப்பினால் G359.13 என அழைக்கப்படும் அண்ட இழைகளைக் காட்டுகின்றன.
- மணிக்கு ஒரு மில்லியன் முதல் இரண்டு மில்லியன் மைல்கள் வரையிலான வேகத்தில் G359.13 இழையில் மோதிய துடிப்பண்டத்தினால் இந்த முறிவு ஏற்பட்டிருக்கலாம்.

- சுமார் 230 ஒளி ஆண்டுகள் நீளமுள்ள, G359.13 ஆனது பால்வெளி அண்டத்தில் உள்ள இந்தக் கட்டமைப்புகளில் மிக நீளமான மற்றும் பிரகாசமான ஒன்றாகும்.
- G359.13 ஆனது புவியிலிருந்து சுமார் 26,000 ஒளி ஆண்டுகள் தொலைவில், பால்வெளி அண்டத்தின் மையத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 2025 ஆம் ஆண்டில் அதிகம் பேசப்படும் முதல் 10 மொழிகள்

| Rank | Language | Number of Speakers |
|---|---|---|
| 1 | English | 1.5B |
| 2 | Mandarin Chinese | 1.2B |
| 3 | Hindi | 609.1M |
| 4 | Spanish | 558.5M |
| 5 | Standard Arabic | 334.8M |
| 6 | French | 311.9M |
| 7 | Bengali | 284.3M |
| 8 | Portuguese | 266.6M |
| 9 | Russian | 253.4M |
| 10 | Indonesian | 252.4M |

- உலக மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் சுமார் 23 முக்கிய மொழிகளில் மட்டுமே தங்கள் தகவல் தொடர்பினை மேற்கொள்கிறார்கள்.
- 2025 ஆம் ஆண்டில் உலகில் அதிகம் பேசப்படும் மொழி ஆங்கிலமாகும்.
- இது 188 நாடுகளில் 1.53 பில்லியன் மக்களின் தாய்மொழி மற்றும் இரண்டாவது மொழி ஆகும்.
- சீனாவின் அதிகாரப்பூர்வ மொழியான மாண்டரின் சீனம் என்பது, முதல் நிலை மொழி (பூர்வீக) பேசுபவர்களை மட்டும் கணக்கிடச் செய்யும் போது உலகின் மிகப்பெரிய மொழியாகக் கருதப்படுகிறது.
- 1.18 பில்லியன் பேர்கள் இந்த மொழியை பேசுவதுடன், இது 2025 ஆம் ஆண்டில் உலகில் இரண்டாவது பரவலாகப் பேசப்படும் மொழியாக அமைகிறது.
- உலகளாவிய முதல் 20 இடங்களில் 5 இந்திய மொழிகள் இடம் பெற்றுள்ளன.
- அவை இந்தி (3வது), வங்காளம் (7வது), உருது (11வது), மராத்தி (16வது), தெலுங்கு (18வது) ஆகியனவாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2025 உலக உணவுப் பரிசு - மரியங்கெலா ஹங்ரியா

- பிரேசில் நாட்டினைச் சேர்ந்த அறிவியலாளர் மரியங்கெலா ஹங்ரியா 2025 ஆம் ஆண்டிற்கான உலக உணவுப் பரிசை வென்றுள்ளார்.
- பயிர் விளைச்சல் மற்றும் ஊட்டச்சத்தினை அதிகரிப்பதற்காக இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் உயிரியல் விதை மற்றும் மண் வள மேம்பாட்டு

முறைகளை உருவாக்குவதில் அவர் ஆற்றிய முன்னோடியான பணிக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

- ஹங்ரியா உருவாக்கிய பல்வேறு தொழில்நுட்பங்கள் காரணமாக பிரேசில் நாட்டின் விவசாயிகள் வேளாண்மைக்கான உள்ளீட்டுச் செலவில் ஆண்டுதோறும் 40 பில்லியன் டாலர் வரையில் சேமித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- புல் மேய்ச்சல் நிலங்களுக்கான முதலாவது நுண்ணுயிர்த் தடுப்பு மருந்தினை/மூல நுண்ணுயிரியினை அவர் உருவாக்கியுள்ளார்.
- இது உயிரி எரிபொருளில் 22 சதவீதம் அதிகரிப்பிற்கும், கால்நடைத் தீவனத்தினை மேம்படுத்துவதற்கும் உதவியது.




# முக்கிய தினங்கள்

## உலகளாவிய அணுகல் விழிப்புணர்வு தினம் (GAAD) 2025 - மே 15




- இது ஆண்டுதோறும் மே மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- எண்ணிம அணுகல்/உள்ளடக்கம் மற்றும் பல்வேறு மாற்றுத்திறன் உள்ளவர்கள் பற்றி அனைவரும் பேசவும், சிந்திக்கவும், கற்றுக் கொள்ளவும் செய்வதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.


- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது, இந்த நாளில் 'உள்ளடக்கிய வகையிலான இந்தியா உச்சி மாநாட்டை' புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.

## தேசிய டெங்கு காய்ச்சல் தினம் 2025 - மே 16




- டெங்கு காய்ச்சலின், குறிப்பாக மழைக் காலங்களில் அதிகரித்து வரும் அச்சுறுத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டெங்கு காய்ச்சல் என்பது ஏடிஸ் கொசுக்கள் கடிப்பதால், குறிப்பாக ஏடிஸ் எஜிப்டி வகை கொசுக்கள் கடிப்பதால், பரவும் ஒரு வைரஸ் தொற்று ஆகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Act Early, Prevent Dengue: Clean Surroundings, Healthy Living' என்பதாகும்.

## சர்வதேச ஒளி தினம் 2025 - மே 16




- அன்றாட வாழ்வில் ஒளி சார்ந்த தொழில்நுட்பங்கள் வகிக்கும் அத்தியாவசியப் பங்கு குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1960 ஆம் ஆண்டில் இயற்பியலாளர் மற்றும் பொறியியலாளர் தியோடர் மைமன் முதலில் மேற்கொண்ட மிகவும் வெற்றிகரமான சீரொளிக் கற்றை சார்ந்த அறுவை


சிகிச்சையின் ஆண்டு நிறைவை இந்த நாள் நினைவு கூர்கிறது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Light, Innovation, Society" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையானது, 2015 ஆம் ஆண்டை சர்வதேச ஒளி மற்றும் ஒளி சார்ந்தத் தொழில்நுட்ப ஆண்டாக (IYL 2015) அறிவித்தது.

# இதரச் செய்திகள்

## தாலேட்டுகள் – இருதயக் குழாய் நோய் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள்

- உலகளவில் 2018 ஆம் ஆண்டில் 55 முதல் 64 வயதுடைய ஆண்கள் மற்றும் பெண்கள் இடையே இருதயம் சார்ந்த நோயால் ஏற்படும் உயிரிழப்புகளில் 10 சதவீதத்திற்கும் அதிகமானவற்றுக்கு தாலேட்டுகள் முக்கியப் பங்களிப்புக் காரணியாக உள்ளன.
- இந்தச் செயற்கை இரசாயனங்களானது, உணவுச் சேமிப்பு கொள்கலன்கள், ஷாம்பு, ஒப்பனைப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் போன்ற நுகர்வோர் பொருட்களில் காணப்படுகின்றன.
- நெகிழிப் பொருட்களை மேலும் நெகிழ்வு தன்மை கொண்டதாக மாற்றுவதற்கு மிகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் டை-2-எத்தில்ஹெக்ஸைல் தாலேட் (DEHP) என்ற ஒரு வேதிப் பொருளானது இருதய நோய் சார்ந்த உயிரிழப்புகளுக்கு ஒரு காரணமாக அமைந்தது.
- 55 முதல் 64 வயதுடையவர்களில் சுமார் 103,587 உயிரிழப்புகளுடன், உலகளவில் DEHP காரணமாக ஏற்பட்ட இருதய நோய் சார்ந்த உயிரிழப்புகளானது, இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளது.
- ஒரு முக்கிய நெகிழி உற்பத்தியாளரும் நுகர்வோருமான சீனாவில், இது போன்ற 33,858 உயிரிழப்புகளைப் பதிவாகியுள்ளதுடன், சுமார் 52,219 உயிரிழப்புகளைக் கொண்ட அளவில் இந்தோனேசியாவிற்கு அடுத்தபடியாக அது மூன்றாவது இடத்தைப் பிடித்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★